Registered at the G. P. O. as a Newspaper

விசேஷ பதிப்பு

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389
மலர் 3

National TAMIL DAILY

தேசிய தினசரி

யாழ்ப்பாணம், சார்வரி மாசி 10-ஆம் நாள் றம்ளான் 5. (21-2-61) செவ்வாய்க்கிழமை

தபாற் பெட்டி எண்: 49
இதழ் 9

Jegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ மதுரை

# இரண்டாம் நாள் போர்

## கச்சேரிக்கு வெளியே அரசாங்க சிப்பந்திகள்

### நகரசபை கட்டிடத்தின் மீது கறுப்புக் கொடி

யாழ்ப்பாணம் செவ்வாய்

தமிழரசுக் கட்சியின் இரண்டாம் நாள் 'மறியல்' இயக்கம் இன்று காலை கச்சேரியில் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்மமாகித் தொடர்ந்து அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உயர்தர உத்தியோகத்தர்கள் மட்டும் கச்சேரியில் வேலை செய்கின்றனர்.

பொலிசாரின் நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக அரசாங்க குமாஸ்தாக்கள் வேலைக்குச் செல்லவில்லை, ஆயுதந் தாங்கிய பொலிஸ்காரர் கச்சேரியின் முன்னால் நிற்கின்றனர். சுமார் 125 தொண்டர்கள் மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டுள்ளனர். திரு. செல்வநாயகம் காரிலிருந்தபடியே கவனித்துக்கொண்டிருந்தார். கச்சேரிக்கு பொது மக்கள் எவரும் செல்லவில்லை. இன்று மாலைவரை இந்த இயக்கம் தொடர்ந்து நடைபெறும்.

மறியல் இயக்கத்தில் கலந்து கொண்ட தொண்டர்களை நேற்று பொலிசார் தாக்கியதற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக யாழ்ப்பாண மாநகரசபைக் கட்டிடத்தின் மீது கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

"கச்சேரி அலுவல்கள் நடைபெறுகின்றனவா?" என்று இன்று நண்பகல் அரசாங்க அதிபர் திரு ஸ்ரீகாந்தாவிடமும் உதவி அரசாங்க அதிபர் திரு ஏ. தெட்சணாமூர்த்தியிடமும் கேட்டதற்கு "எதுவும் சொல்ல நாங்கள் விரும்பவில்லை" என்று அவர்கள் பதிலளித்தனர்.

தமிழ்ப் பகுதிகளில் சிங்களத்தைத் திணிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையை எதிர்த்து தமிழரசுக் கட்சி ஆரம்பித்துள்ள நேரிடி நடவடிக்கையின் இரண்டாவது அம்சமான மறியல் இயக்கம் இன்றுகாலை யாழ்ப்பாணம் கச்சேரியில் இரண்டாவது தினமாக இன்று நடைபெற்றது.

இன்று காலை 7-30 க்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் தொண்டர்கள் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு வந்து சேர்ந்தனர்.

தொண்டர்கள் கச்சேரிக்கு வந்து சேருமுன்பே அங்கு வந்து சேர்ந்த 'இரும்புத் தொப்பி' அணிந்த ஆயுதந்தரித்த பொலிசார் கச்சேரி முன் கூடிவிட்டனர். கச்சேரியின் பிரதானவாசலுக்கு அடுத்துள்ள சிறிய வாசலில் தொண்டர்கள் இடம் பிடித்துக்கொள்ளாமல் பொலிசாரே இடம் பிடித்துக்கொண்டனர்.

கச்சேரியின் முன்புறம் பெருந்தொகையான மக்கள் இன்று காலையிலேயே திரண்டு நின்றனர். திரு. அமிர்தலிங்கமும் தொண்டர்களும் பிரதான வாசலில் வழியை மறித்துநின்றனர் திரு. வி. ஏ. கந்தையாவும் மற்றும் சில தொண்டர்களும் 'ஓல்ட் பாக்' எனப்படும் பூங்கா வாசலில் உட்கார்ந்து கொண்டனர்.

காலை 8-30 க்குக் கச்சேரி ஊழியர் ஒருவர் உட்செல்வதற்கு வந்தபொழுது பொலிசார் சிறியவாசல் வழியாக வழிவிட்டுக் கொடுத்தனர். அந்த ஊழியர் உள்ளே செல்வதைக்கண்ட திரு. அமிர்தலிங்கம் கச்சேரி வராந்தாவுக்கு ஓடிச்சென்று அவரை மறியல் செய்தனர். அதையும் மீறி அவர் ஓடிச்சென்று ஒரு அறையில் புகுந்தார். இதைக்கண்ட நீர்கொழும்பிலிருந்து வந்த தமிழ்த்தொண்டர் திரு. பிரான்ஸிஸ் "வணக்கம்! போய் வாருங்கள் ஐயா" என்று விடைகொடுத்தனுப்பினர்.

### வராந்தாவில் உட்கார்ந்தனர்

பின்னர் திரு. அமிர்தலிங்கமும் சில தொண்டர்களும் கச்சேரி பிரதானவாசலில் உள்ள வராந்தாவில் அமர்ந்து கொண்டனர். மற்றும் சில தொண்டர்கள் பிரதான வாசலில் வீதியில் உட்கார்ந்து கொண்டனர்.

### காரிலிருந்து கவனித்தார்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கச்சேரிப் பிரதான வாசலுக்கு எதிரே விடப்பட்டிருந்த திரு. அமிர்தலிங்கத்தினுடைய காருக்குள் இருந்தபடி கவனித்துக் கொண்டிருந்தார்.

### தமிழ் பாதுகாப்பு இயக்கத் தலைவர்

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் குரசர்ட் ஆர். தம்பையாவும் இன்று காலையில் கச்சேரிக்கு முன்னால் நின்று நிகழ்ச்சிகளைச் கவனித்துக் கொண்டு நின்றார்.

### அதிகாரிகள் வெளியேறவில்லை

நேற்றுப் பிற்பகல் காரியாலயத்துக்குள் நுழைந்த கச்சேரி உயர்தர உத்தியோகத்தர்கள் வெளியே வரவில்லையென்று தெரிகிறது. இன்றும் அவர்கள் ஓரளவு மூடப்பட்ட அறைகளில் உட்கார்ந்திருந்தனர்.

### குமாஸ்தாக்கள் போகவில்லை

கச்சேரி ஊழியர்கள் குமாஸ்தாக்கள் உட்படப் பலர் இன்று வேலைக்குப் போகவில்லை. அரசாங்க ஊழியர் நேற்றுப் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளானதால் பொலிசாரின் நடவடிக்கை பற்றி விசாரணை நடத்த வேண்டுமெனப் பிரதம மந்திரி, நிதி மந்திரி, பொலிஸ் அதிபர் ஆகியோருக்கு விடுத்திருந்த கோரிக்கைக்கு ஒரு முடிவு

(4ம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் தாக்குதல்

#### மட்டக்களப்பில் அனுதாபம்

மட்டக்களப்பு செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் தொண்டர்கள் பொலிசாரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து மட்டக்களப்பு தமிழரசுக் கடசிக் கிளை நிர்வாகிகள் அவசர அவசரமாகக்கூடி ஆலோசனை செய்ததனர்.

என்ன நடவடிக்கை எடுப்பதென்று இன்று நண்பகல் மீண்டும் கூடி முடிவுசெய்யும்.

மட்டக்களப்பில் விடாது மழைபெய்து கொண்டிருப்பதால் ஆட்சேப நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கு வசதியில்லாதிருப்பதாகத் தெரிகிறது.

இன்று மட்டக்களப்பு வழக்கறிஞர்களும் கூடிமறியல் இயக்கம் பற்றியும் பொலிசாரின் தாக்குதல் பற்றியும் ஆராய்வரென அறியப்படுகிறது.

## " மிருகத்தனமான செயல் "

### இராசமாணிக்கம் கண்டனம்

மட்டக்களப்பு, செவ்

"மறியல் செய்த தொண்டர்களை யாழ்ப்பாணம் பொலிசார் தாக்கியது மிருகத்தனமான செயல்" என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். எம். இராஜமாணிக்கம் ஓர் அறிக்கையில் கண்டித்துள்ளார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராஜமாணிக்கம் தமது அறிக்கையிற் குறிப்பிட்டிருப்பதாவது:

தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் மீதும், தமிழரசுக் கட்சி எம். பீக்கள் மீதும் பொலிசார் நடத்தியுள்ள தாக்குதல் மிருகத்தனமானது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. தமிழ்ப்பேசும் மக்களின் ஜீவாதார உரிமைக் கோரிக்கையை பொலிசையும், இராணுவத்தையும்கொண்டு அடக்கி ஒடுக்கி விடலாம் என்று அரசாங்கம் நினைப்பது தவறு. தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்துவிட்டு 'சட்டம் ஒழுங்கு' என்ற பெயரால் நடத்தப்படும் அட்டூழியங்களுக்குத் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கம் கடைசியில் பொறுப்பேற்றுத் தாணுகவேண்டும். தமிழ்ப் பேசும் மக்கள் நீதி நேர்மையுடன் நடப்பார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை.

யாழ்ப்பாணத்தில் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ்ப்பேசும் மக்களை புண்படுத்தியுள்ளது மாத்திரமல்ல உலகத்துக்கே அதிர்ச்சியளிக்கக்கூடியதொன்ருகும்.

## சிங்கள வகுப்பு நிறுத்தப்பட்டது

### மட்டக்களப்பில் நேரடி நடவடிக்கை ஆரம்பம்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் நேரடிநடவடிக்கையின் முதலாவது அம்சமான 'வேண்டுகோள்' இயக்கம் நேற்று மிக அமைதியாக நடைபெற்றது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம் இராசமாணிக்கம், மட்டக்களப்பு எம். பி. திரு செ. இராசதுரை, கல்முனை எம். பி. ஜனுப் ஏ. ஸி. ஏ. அஹ்மத், கல்குடா எம். பி திரு. பி. மாணிக்கவாசகர் ஆகியோரின் தலைமையில் சுமார் 200 தொண்டர்கள் கச்சேரிக்கும இதர அரசாங்க இலாகாக்களுக்கும் சென்று தமிழ்ப்பகுதிகளில் சிங்களத்தைத் திணிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு உடந்தையாக இருக்க வேண்டாம் என்று அரசாங்க ஊழியர்களைக்கேட்டுக்கொண்டனர்.

### அரசாங்க அதிபர் வாக்குறுதி

முதலில் அரசாங்க அதிபர் திரு. பி. ஆர். தேவராஜனிடம் சென்ற தலைவர்கள் அவரிடம் துண்டுப்பிரசுரத்தைக் கொடுத்து தங்கள் கோரிக்கையைத் தெரிவித்தனர்.

தலைவர்கள் கூறியதைக் கவனித்துக்கேட்ட அரசாங்க அதிபர் முடிந்த அளவில் கச்சேரி வேலைகள் யாவும் தமிழிலேயே நடைபெற்று வருவதாகவும் மட்டக்களப்புப் பகுதியிலுள்ள சிங்களமக்களின் கடிதங்களுக்கே சிங்களத்தில் பதில் எழுதப்படுவதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க அதிபரின் கையெழுத்து முத்திரை (ஃபிராங்க்) சிங்களத்தில் இருப்பதைத்தலைவர்கள் சுட்டிக்காட்டினர். ஆங்கிலத்திலும் கையெழுத்து முத்திரை இருப்பதாகவும் சிங்கள முத்திரையை உபயோகிக்காமல் விடுவதுபற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தாராம்.

இதன்பின் இதர அரசாங்க இலாகாக்களுக்கும் சென்று தலைவர்களும் தொண்டர்களும் வேண்டுகோள் விடுத்தனர்.

### சிங்கள வகுப்பு நின்றது

மட்டக்களப்பு நகரிலுள்ள வெட்டுக்காடு என்னுமிடத்தில் பௌத்த பிக்கு ஒருவர் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களம் கற்றுக் கொடுப்பதற்கு சிங்கள வகுப்பு நடத்தி வந்தார். இவரைத் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் சந்தித்து சிங்களத்தை எஜமான் மொழியாக்க அல்ல, சகோதர மொழியாகக் கற்றுக் கொள்ள விரும்புகிறார்களென்றும் அதற்காகத் தமிழர் நடத்தும் உரிமைப் போராட்டத்திற்கு இடையூறு செய்ய வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டனர்.

புத்த பிக்கு இதற்கு இணங்கவே தலைவர்களும் தொண்டர்களும் வெளியேறினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

